# பொலிஸ் வெகுமதி நிதியம் - 2018

-----------------------------------------------------------------

## 1.1 அபிப்பிராயம்

---------------------

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று உரித்து மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

-----------------------------------------------------------------------------

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

-----------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 18,151,675 ஆன தண்டப்பணம் 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருந்தது, எவ்வாறாயினும் அப்பெறுமதி கிடைக்க வேண்டிய தண்டப்பணமாக இனங்காணப்பட்டு 2018 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | ஆண்டின் இறுதி கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் தண்டப்பண வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 7,280,501 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | ஆண்டின் இறுதி கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 மாவட்ட செயலகங்களிலிருந்து கணக்காய்விற்கு நேரடியாக வழங்கப்பட்டிருந்த மோட்டார் வாகன தண்டப்பண அறிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மோட்டார் வாகன தண்டப பணம் மொத்தம் ரூபா 5,055,840 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | ஆண்டின் இறுதி கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 20 பொலிஸ் பிரிவுகளால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 815,500 தொகையான நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட செலவினம், பொதுவான கட்டுநிதி செலவினமொன்றாக நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | ஆண்டின் இறுதி கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2.1 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு வழங்கியிருந்த ரூபா 2,000,000 முற்பணத் தொகை 18 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு இக்கொடுப்பனவு தீர்வுசெய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விஷேட சுற்றி வளைப்புகளுக்காக நிதியத்தில் இருந்து வெகுமதிகள் செலுத்தும் போது வழக்குகள் முடிவடைவதற்கு முன்னர் 50 சதவீதம் செலுத்தப்படுவதுடன். மீதி வழங்கு முடிவடைந்தவுடன் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும் அவ்வாறு வழக்கு விடயங்கள் முடிவடையாமை காரணமாக செலுத்த வேண்டிய விசேட வெகுமதி பெறுமதி ரூபா 75,277,961 தொகை 01 வருடமும் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். வழக்கு விடயங்கள் முடிவடையாமை காரணமாக இந்நிலைமை உருவாகியிருந்தது. | செலுத்த வேண்டிய விஷேட வெகுமதிகளுக்குரிய விடயங்கள் முடிவடையாமை செயன் முன்னேற்றத்தில் பொருத்தமான நடைமுறை மற்றும் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,065,029,2455 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,663,672,230 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 401,357,015 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு வாகனத்தண்டப்பண பெறுவனவு ரூபா 272,625,952 ஆல் அதிகரித்தமை மற்றும் நிலையான வைப்பு முதலீட்டு வட்டி ரூபா 191,405,350 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 4 செயற்பாடடு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முதலீடு செய்யப்பட்டுள்ள நிலையான வைப்புக்கள் மற்றும் அதன் மீது உழைக்கப்பட்டுள்ள வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் போது ரூபா ரூபா 8,123 மில்லியன் மற்றும் ரூபா 819 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அப்பெறுமதிகள் முறையே ரூபா 9,821 மில்லியன் மற்றும் ரூபா 1,011 மில்லியனாக இருந்தன. | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | சம்மேளத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்நிதியத்தின் நிலுவை வைப்புக்களின் பெறுமதி மற்றும் அதன் மீது வட்டி வருமானம் வருடாந்த அதிகரித்திருந்த இருந்த போதிலும் |
| (ஆ) 2013 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை முறையே ரூபா 433.47 மில்லியன் தொகை, ரூபா 386.09 மில்லியன் தொகை, ரூபா 325.67 மில்லியன் தொகை, ரூபா 469.25 மில்லியன் தொகை ரூபா 819.73 மில்லியன் தொகை மற்றும் ரூபா 1,011.14 மில்லியன் வீதம் தொகை ஆக கூட்டுத்தொகை ரூபா 3,445.35 மில்லியன் தொகை நிலையான வைப்புக்கள் மீது வட்டி வருமானம் என உழைத்திருந்த போதிலும் இந்த வருமானம் நிதியம் நிறுவுவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றிக் கொள்வதற்காக பயன்படுத்தியது எவ்வாறு என்பது தொடர்பாக | அவதானிப்புடன் இணங்குகின்றேன். | நிலையான வைப்புக்கள் வருமான நிதியத்தினை தாபிக்கும் நோக்கங்களுக்காக எவ்வாறு பயன்படுத்தப்பட்டதென்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | தீர்மானம் ஒன்று எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிப்பதற்காக உரிய கோவைகள் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 410 மில்லியன் நிலையான வைப்பு அத்திகதி ஆரம்பிக்கப்படாமல் 2019 சனவரி 01 இல் ஆரம்பிக்கப்பட்டமையால் 13.6 சதவீதமான வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டிற்குரிய நிதியத்திற்கு கிடைக்காமல் இழக்கப்பட்டிருந்த முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 152,767 ஆக இருந்தது. | 2018.12.31 இல் காசோலை வழங்கப்ப டாவிட்டால் மேலும் சில நாட்கள் தாமதமடைவதால் நிதியத்திற்கு இழக்கப்படும் வருமானம் இந்த அளவினை விட அதிகரிப்பதால் கூடிய இலாபமொன்று கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நடைமுறைக் கணக்கில் மிகைப் பணம் தொடர்பாக முன்னர் அவதானத்துடன் சரியான சந்தர்ப்பத்தில் முதலீடு செய்யபபட வேண்டும். |
| (ஈ) | 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி 03 உறுதிச்சீட்டுக்கள் மூலம் ரூபா 1,000,000 ஆன சுற்றி வளைப்பு தொடர்பான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி தொகை கொடுப்பனவு செய்யாமல் தகவல் தருபவர்களுக்கு (ஒற்றர்களுக்கு) மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு மூன்று உறுதிச்சீட்டுக்கள் மூலம் விசேட வெகுமதி கொடுப்பனவின் போது பின்பற்றப்பட்ட வழமையான செயற்பாடுகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒற்றர்களுக்கு வெகுமதி கொடுப்பனவிற்குரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒற்றர்கள் உற்சாகமின்றி இருப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தகவல்கள் கிடைக்காமல் இருப்பதற்கு காரணமாக அமையலாம் | விசேட வெகுமதி கொடுப்பனவின் போது பின்பற்றப்பட்டிருந்த பொதுவான செயற்பாட்டின் கீழ் வெகுமதி கோவை தயாரிக்கப்பட்டு முறைப்படி விசேட வெகுமதி கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |

## 5. செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நாட்டின் 42 பொலிஸ் பிரிவுகளில் 28 பொலிஸ் பிரிவுகளின் 288 இடங்களுக்குரிய வழங்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் 62,794 சாரதிகள் குடிபோதையில் கைது செய்யப்பட்டிருந்ததுடன் 13,745 கைதுகளுக்கு வெகுமதிப் பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 49,049 கைது செய்தமைக்காக வெகுமதி பணம் கொடுப்பனவு | நிதியத்தின் திருத்திய கட்டளை 1990 இன் 7 மற்றும் 8 ஆம் இலக்க பந்திகளின் பிரகாரம் வெகுமதி தொகை பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு அனைத்து பொலிஸ் நிலையங்களையும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரே சமமான கடமையின் போது சகல உத்தியோகத்தர்களும் ஊக்குவிக்ககூடிய வகையில் வெகுமதிப்பணம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

செய்யப்படாதிருந்ததுடன் அது 78 சதவீதமாக இருந்தது.

## 6 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்கான விளையாட்டு பொழுதுபோக்கு நடவடிக்கைகள், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் பரேக் நிர்மாணத்திற்காக முறையே ரூபா 17.35, 17.35 மற்றும் 86.74 மில்லியனாக மொத்தம் ரூபா 121.45 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்செயற்திட்டங்கள் நிறைவேற்றப் படாதிருந்த காரணத்தினால் உத்தியோகத்தர்களின் நலன்புரிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கும் போது இச்செயற்பாடுகளுக்காக பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் ஆண்டில் நலன்புரி நடவடிக்கைகள் பிரேக் நிர்மாணச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை | பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ஆண்டின் இலக்கினை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெகுமதி கொடுப்பனவிற்காக விசேட கட்டுநிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளும் போது மதிப்பிடப்பட்ட செலவினங்களை விட ரூபா 26,859,813 அதாவது 134 சதவீதம் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. மேலும் சாதாரண கட்டுநிதியின் கீழ் ரூபா 110,905,658 தொகையும் வினோத கட்டுநிதியின் கீழ் ரூபா 1,123,671 தொகையும் மோட்டார் கட்டுநிதியின் கீழ் ரூபா 100,618,155 மற்றும் பொலிஸ் மா அதிபர் விசேட வெகுமதி கொடுப்பனவின் கீழ் ரூபா 6,963,108 உமாக மதிப்பிடப்பட்ட செலவினத்தை விட குறைவாக நடப்பாண்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவை 15.84, 14.05, 37.27 மற்றும் 8.7 சதவீதமாக இருந்தன. | அவதானிப்புடன் இணங்குகின்றேன் | பாதீட்டினை மிகைக்கும் போது முறைப்படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |